# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

பாரதியின் கண்ணீர்



www.saivamonline.com

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 18. பாரதியின் கண்ணீர்

## பாரதி நூற்றாண்டு

கடந்த இருபதாம் நூற்றாண்டை, பாரதி நூற்றாண்டு என்று கூறுவது பொருத்தமானதாகும். அண்மையில் ஞானபீட விருதுபெற்ற எழுத்தாளர் த. ஜெயகாந்தன், இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பாரதியுகம் தொடரும் என்றதை நானும் ஏற்கிறேன். தமிழ் இலக்கியத் தடத்தில் 20 ஆம் நூற்றாண்டில், பாரதி பெற்ற மாபெரும் வெற்றி பிரமிப்பூட்டுவது. விஞ்ஞானத் தொழில் நுட்பத் தேரில் ஏறி, பல்வேறு புனைகோலம் பூண்டு, தமிழ்த்தாய் கம்பீரமாக உலாவந்த போதும் அவளைத் தாங்கிப் பிடிக்கும் அரசிருக்கை பாரதி இட்டதேயாகும். உரைநடை, சிறுகதை, புதினம், புதுக்கவிதை எனத் தமிழ் பன்முகப்பட்டுக் கிளைத்துச் செழித்த போதும், பாரதிக்கு அருகில் இன்னொரு இருக்கையிட்டு அவருக்கு இணையாக இன்னொருவரை அமர வைக்க முடியவில்லை. இந்த மாபெரும் வெற்றியின் அடித்தளங்கள் யாவை?

---

*உரைநடை, சிறுகதை, புதினம், புதுக்கவிதை எனத் தமிழ் பன்முகப்பட்டுக் கிளைத்துச் செழித்த போதும், பாரதிக்கு அருகில் இன்னொரு இருக்கையிட்டு அவருக்கு இணையாக இன்னொருவரை அமர வைக்க முடியவில்லை.*

---



www.saivamonline.com

## பாடுபொருள் தந்த வெற்றி

பாரதியின் வெற்றிக்கு முதற்காரணமும், மூல காரணமுமாகத் திகழ்வது அவர் தேர்ந்து கொண்ட பாடு பொருள் மானுடமாக அமைந்ததே ஆகும். ஆழ்வார்கள் நாயன்மார்கள் எழுச்சி பெற்ற ஏழாம் நூற்றாண்டுத் தொடங்கிப் பாரதி பாடத் தொடங்கிய காலம் வரை, தமிழ் இலக்கியங்களின் கருவாகப் பாடுபொருளாகக் கடவுளர்கள் முன்னிறுத்தப்பட்டனரே அன்றி மனிதர்கள் முன்னிலைப் படுத்தப்படவில்லை. ஆன்மிக உணர்வும், காப்பிய எழிலும், கற்பனைப் புனைவும், உவமைக் கோலங்களும் கொட்டிக் கிடந்தபோதும், பன்னிரண்டு நூற்றாண்டுக் காலத் தமிழ் இலக்கியங்களிலிருந்து மானுடம் அன்னியப்பட்டே நின்றது. கடவுளுக்கு முன், கைகட்டிச் சேவகம் செய்யும் சிறு துரும்பாகவே மனிதன் நிறுத்தப்பட்டிருந்தான். பாரதியின் மாபெரும் வெற்றிக்கு அவர் மனிதனை மீண்டும் கவிப்பொருளாக்கிக் கொண்டதே முதற் காரணம். சங்க இலக்கியங்களில் மானுடம் கருப்பொருளாக நின்றது. ஆனாலும் அங்கே மானுடம் என்ற பெயரில் மன்னர்களும் செல்வர்களும் வள்ளல்களுமே முன்னிறுத்தப்பட்டனர். பாரதி வந்த பின்னர்தான், இது என் கவிதை, என்னைப் பற்றியது என, மானுடம் வியப்போடு தமிழை ஏறிட்டுப் பார்க்கத் தொடங்கியது.

*பாரதியின் மாபெரும் வெற்றிக்கு அவர் மனிதனை மீண்டும் கவிப்பொருளாக்கிக் கொண்டதே முதற் காரணம்.*

## சமயங்களை அரவணைத்தல்

பாரதியின் இமாலய வெற்றிக்கு இரண்டாவது காரணம் அவர் தமிழ் மொழியை, தமிழ் இலக்கியத்தை, தமிழ்க் கவிதைகளைப் பண்டிதர்கள் கையிலிருந்து தட்டிப் பறித்துப் பாமரர்கள் கையில் வழங்கியதுதான். பாரதி காலத்துக்கு முன் வரை தமிழும் இலக்கியமும் இன்னாருக்காகத்தாம் என்று, ஒரு கூட்டத்தை மட்டும் முன்னிறுத்தியே வழங்கப்பட்டன. இனவழியே பகைத்து, சமயவழியே பேதப்பட்டுக் கிடந்த தமிழ் இனம் சந்தேகக் கண்ணுடன் அவற்றைப் பார்த்து நின்றது. இது நமக்கில்லை என்று சைவர்கள், நாலாயிர நல்ல தமிழை விட்டனர். வைணவர்கள், திருமுறைத் தேன்பருக நாட்டமில்லாதவராயினர். சமய நூல்கள் யாவும் தமிழில் படைக்கப்பட்டிருந்த போதிலும், இந்தப் பேதா பேதங்கள் படைப்பாளிக்கு முழு அங்கீகாரத்தைத் தமிழ் மண்ணில் பெற்றுத்தருவதில் தடையாக நின்றன. பாரதி, இன எல்லைகளைத்



www.saivamonline.com

தகர்த்தார். சமய வரைபடங்களைக் கிழித்தெறிந்தார். பாரதிதமிழ் பேதமற்ற பாமரர் தமிழாகப் போற்றிக் கொள்ளப்பட்டது.

*பாரதி, இன எல்லைகளைத் தகர்த்தார். சமய வரைபடங்களைக் கிழித்தெறிந்தார். பாரதிதமிழ் பேதமற்ற பாமரர் தமிழாகப் போற்றிக் கொள்ளப்பட்டது.*

## எளிமையின் வெற்றி

பாரதியின் வெற்றி என்பதெல்லாம், தமிழின் வெற்றிதான். கடந்த நூற்றாண்டை அவர் வென்று தனதாக்கிக்கொண்டு வீறு நடைபோடுவதற்கு மூன்றாவது காரணம் அவர் கவிதைகளில் காணப்பட்ட எளிமை. ஔவையார், சில நீதி நூல் ஆசிரியர் கவிதைகள் தவிர, தமிழில் எழுந்த ஒப்பற்ற இலக்கியங்கள் முற்றாகச் சமூக அங்கீகாரம் பெறாமைக்குக் காரணம், அவற்றின் மொழியாக்கக் கடுமை, பாமரனுக்குப் புரியாத சொல்லாட்சிகள், பிரித்துப் படிக்க முடியாத வகையுளித் தொடர்கள், நிகழ்காலச் சமூகத்தின் மொழி அறிவைக் கணிக்கத் தவறிய பிழைபாடுகள். பாரதி, இந்தத் தவறுகளைச் செய்யவே இல்லை. தம் கவிதைகளில் அவர் சொல் புதிது, பொருள் புதிது என்று குறித்தாரே அதன் நுட்பம் உங்களுக்குப் புலப்படுகிறதா? அவர் ஒன்றும் தமிழில் இல்லாத புதுச்சொற்களைப் படைத்துக் கொள்ளவில்லையே! மரபுக்கு மாறாக என்ன புதுப் பொருளை அவர் முன் நிறுத்தினார்? ஒன்றுமில்லை!

*இந்தச் சொல்லுக்கு இதுதான் பொருள் என்று பாமரன் உணரும் அதே பொருளில், அதனை அவர் தம் கவிதைகளில் கையாண்டார். யாப்பு என்று கூறப்படும் கவிதை வடிவம் பற்றிய எல்லைகளை அவர் தகர்க்கத் துணிந்தார். பாரதி கவிதை பாமரனுக்கு வசப்பட்டது.*

## பாமரனுக்குக் கவிதை

தமிழ் நாட்டுச் சராசரிப் பாமரனின் அன்றாடப் பேச்சு வழக்கில் இருந்து, அவர் கவிதைக்குச் சொற்களைத் தேர்ந்து கொண்டார். இந்தச் சொல்லுக்கு இதுதான் பொருள் என்று பாமரன் உணரும் அதே பொருளில், அதனை அவர் தம் கவிதைகளில் கையாண்டார். யாப்பு என்று கூறப்படும் கவிதை வடிவம் பற்றிய எல்லைகளை அவர் தகர்க்கத்



www.saivamonline.com

துணிந்தார். பாரதி கவிதை பாமரனுக்கு வசப்பட்டது.

***ஓடி விளையாடு பாப்பா - நீ***
***ஓய்ந்திருக்க லாகாது பாப்பா***

***சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்***
***தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்***

கவிதை புரிகிறதே! யாப்பழகு ஒன்றும் கெட்டுவிடவில்லையே! பெரிய செய்தி, எளிய தமிழில், புரியும் சொற்களால் வெளிப்பட்டபோது, பெரும் பான்மைப் பாமரத் தமிழ்ச் சமுதாயத்தை, அதனால் சென்று அடைய முடிந்தது.

## சாதியக்கட்டு உடைத்தது

பாரதியார் பிறப்பால் பிராமணர், பார்ப்பன குலத்தில் வந்தவர். அவர் கவிதைகளைப் பார்ப்பனரும் அங்கீகரித்தனர். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பேதம், தமிழ்ச்சமுதாயத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட காலத்திலும், பாரதியாரைப் பார்ப்பனர் என்று ஒதுக்கிவிடாது பிராமணர் அல்லாதாரும் தமிழ் மண்ணில் ஏற்றுப் போற்றினர். கவிஞன் ஒரு மொழி வழிச்சமுதாயத்தில் உதித்து, உலகப் பொதுமை பெற்று உயர்தல் வேண்டும். பாரதி, பிறப்புப் பற்றி வந்த சாதியச் சுவடுகள், தன்மீது சிறிதும் பதிந்துவிடாது கவனமாகப் பார்த்துக் கொண்டவர். குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்று, தன் இனத்தாருக்கு அறிவுரை கூறியவர். வாக்கால் மட்டுமின்றி வாழ்வாலும், சாதியம் கடந்த ஒரு தமிழ் மகனாக ஐயத்திற்கு இடமின்றி உயர்ந்து நின்றவர். ஆரிய, திராவிட வாதம் பெருகி நின்ற 20 ஆம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூக அமைப்பில், பாரதி, திராவிட இயக்கத்தாரின் அங்கீகாரத்தையும், போலித்தனமற்ற வாழ்வாலும் தம் வாக்காலும் எட்டிப்பிடித்தார். பாரதிக்குப்பின் வந்த கவிஞர் பலர், சிறந்த புலமை மிக்கு இருந்த போதும், ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயத்தின் அங்கீகாரத்தையும் பெற இயலாது போனதற்கு, அவர்கள் தங்களை ஒரு கூட்டத்தில் நிறுத்திக் கொண்டு, அக்கூட்டத்தின் பிரதிநிதியாக அடையாளப்படுத்தியதே காரணம்.

*பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பேதம், தமிழ்ச்சமுதாயத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட காலத்திலும், பாரதியாரைப் பார்ப்பனர் என்று ஒதுக்கிவிடாது பிராமணர் அல்லாதாரும் தமிழ் மண்ணில் ஏற்றுப் போற்றினர்.*



www.saivamonline.com

## வேறு இரண்டு காரணங்கள்

பாரதியின் வெற்றிக்கும், அவருக்குக்கிடைத்த பரவலான ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாய அங்கீகாரத்திற்கும் வேறு இரண்டு காரணங்களையும், நான் நினைத்துப் பார்க்கிறேன். அவற்றுள் ஒன்று பாரதி நாத்திக வாதத்தைக் கடவுள் மறுப்பை இம் மண்ணில் விதைக்க முயலாமை. ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று சொல்லி அலையும் அறிவிலிகாள் என்றும், அறிவொன்றே தெய்வம் என்றும், செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாம் என்பார் பித்தமனிதர் என்றும் பாடியவர்தாம் பாரதி. பாரதியின் நோக்கம் தமிழ்ச் சமுதாயத்தைப் பேதமின்றி ஒன்று திரட்டி, விடுதலைப் போருக்கு அவர்களைத் தயார்செய்தலே ஆகும். இந்த முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு ஆத்திக, நாத்திக வாதம் புரிந்தால் ஏதேனும் ஒரு குழு, அன்னியப்பட்டுப் போய்விடும் என்பது நன்றாகவே புரிந்திருந்தது. புராணங்கள் பலவும் பொய் என்று கருதியவர் அவர். ஏசு முதல் இராமன் வரை எல்லா அவதாரங்களும் ஒரு நாள் செத்து ஒழியும் என்றவர் பாரதி. விநாயகர் முதல் முத்துமாரிவரை அவர் போற்றி நின்றதற்குக் கூட காரணம், அவ்வத்தெய்வங்களுக்குப் பாராட்டுரைத்து, அருள்பெற்று வாழவேண்டுமென்பது அவர் நோக்கம் என்று நான் கருதவில்லை. தெய்வங்களின் பெயரால் பிரிந்து நின்ற தமிழ்ச் சமுதாயத்தை, சிதறவிடாது உடன் நடந்து ஒன்றுபடுத்தி விடுதலை வேள்வியில் முன்னிறுத்த வேண்டும் என்ற உயர் நோக்கமாகவே இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. முறையான தமிழ்க்கல்வியும், கட்டுக்கோப்பான கவிதை விலாசமும், அளப்பரிய தமிழ் அன்பும் கொண்டிருந்த பாரதியின் சீடர் பாவேந்தர், பரவலாகத் தமிழ் மக்களின் முழு அங்கீகாரத்தைப் பெற இயலாமைக்குத் திராவிடச் சார்பும் கடவுள் மறுப்பும் கூட காரணங்களாகலாம் எனறே தோன்றுகிறது.

---

*பாரதியின் நோக்கம் தமிழ்ச் சமுதாயத்தைப் பேதமின்றி ஒன்று திரட்டி, விடுதலைப் போருக்கு அவர்களைத் தயார்செய்தலே ஆகும். இந்த முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு ஆத்திக, நாத்திக வாதம் புரிந்தால் ஏதேனும் ஒரு குழு, அன்னியப்பட்டுப் போய்விடும் என்பது நன்றாகவே புரிந்திருந்தது.*

---

## ஆங்கிலத்தின் இடத்தில் தமிழ்

இரண்டாவதாக ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் அவர்



www.saivamonline.com

வெற்றிக்கு, ஆங்கிலத்தை அகற்றி, அந்த இடத்தில் தமிழை நிலை பெறச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தைக் குறிப்பிடலாம். கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு, வடமொழி அறிவு பெறாத தமிழ்ப் புலமை இங்கே இழிவாகக் கருதப்பட்டது. தனித்தமிழ் இயக்கங்கள் முதலில் வடமொழியை எதிர்த்தே தொடங்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக்கல்விக்கு மட்டுமே முதன்மை தரப்பட்டது. தமிழும், தமிழ் கற்றாரும், தமிழ் அறிஞர்களும் ஆங்கிலமும் கற்ற தமிழர்களாலேயே இழித்துரைக்கப்பட்டனர். பாரதி ஆங்கிலமும் வடமொழியும் நன்கு கற்றவர். பிரஞ்சு மொழியும், இந்தியும் அவருக்கு ஓரளவு தெரிந்தவை. இருந்தும், தாய்மொழியாகிய தமிழ்மீது அவர் மேலான அன்பு செலுத்தினார். தமிழைக் காதலித்தார். தமிழர்கள், தமிழ் கற்றுத் தமிழால் உயர்ச்சி பெறவிரும்பினார். இனவழிப் பேதங்களை மொழிவழி ஒன்றுபடுத்தி இணைக்க உளமார விரும்பினார். ஆங்கிலக் கல்வி தமிழையும் தமிழ்ப் பெருமிதங்களையும் அழித்து வருவதை உணர்ந்தார். தமிழ் மொழி, புதிய கலைச் செல்வங்களைப் பெற்றுத் தலைநிமிர வழி தேடினார். சில நல்ல ஆலோசனைகளையும் தமிழ் மக்கள் முன் வைத்தார்.

***தாய்மொழியாகிய தமிழ்மீது அவர் மேலான அன்பு செலுத்தினார். தமிழைக் காதலித்தார். தமிழர்கள், தமிழ் கற்றுத் தமிழால் உயர்ச்சி பெறவிரும்பினார். இனவழிப் பேதங்களை மொழிவழி ஒன்றுபடுத்தி இணைக்க உளமார விரும்பினார்.***

## தேசமே அவர் முதல் குறிக்கோள்

பாரதியின் உள்ளார்ந்த விருப்பங்களுள் உணர்வுகளுள் முதலிடம் வகிப்பது தேசவிடுதலைதான். மொழி, சமயம், இலக்கியம், என்பன எல்லாம் பாரதியில் உள்ளன. அவை எல்லாம் அவரது தேசப் பற்றுக்கு ஆதரவாகவே பாடப்பெற்றன. நமக்குத் தொழில் கவிதை என்ற பதிவில், நாட்டுக்கு உழைப்பதற்கே கவிதைத் தொழில் புரிவதாக விநாயகரிடம் பேசுகிறார். வாழிய செந்தமிழ் என்று தொடங்கி, தமிழ், தமிழர் என்று வரிசைப்படுத்தி விட்டு, வாழிய பாரத மணித்திருநாடு என்றே தம் எண்ணம் நிறைவிக்கிறார். அவர் இலக்கியப் படைப்பில் ஒன்றாகிய பாஞ்சாலி சபதம், பாரதமாதாவின் விலங்கொடிக்கப் பாண்டவர்கள் போல் தயங்கிக்கிடந்த பாரத மக்களை ஒரு போராட்டத்திற்கு அறைகூவல் விடுப்பதாகவே அமைந்தது. அவரை



www.saivamonline.com

முன்னோர், தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் என்றதே சரியான மதிப்பீடு. தேசவிடுதலை அறைகூவல்களின் இடையே நிழலாடும் பாரதியின் தமிழ் உணர்வுப் பதிவுகள் சிலவற்றை இனி இனங்காட்டி நிறைவிப்பேன்.

## இலக்கியங்கள் தந்த வாழ்வு

மொழிவழி மாநிலங்கள், இந்திய தேசத்தின் ஒருங்கிணைப்புக்குள் கட்டுப்பட்டு, கொண்டும் கொடுத்தும் பெருமிதத்தோடு வாழ்தல் வேண்டும் என்பது பாரதியின் விருப்பம். தமிழ் நாட்டின் பெருமை எல்லாம், இங்கே வாழ்ந்திருந்து, அருந்தமிழ் நூல்கள் பல ஆக்கித் தந்த கவிஞர்களால் அமைந்தவை என்று அவர் உளமார நம்பினார். கம்பன் பிறந்த தமிழ்நாடு என்றும்,

*வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு*

என்றும்

*நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரம் என்றோர்*
*மணி ஆரம் படைத்த தமிழ் நாடு*

என்றும் கூறும் பாரதியின் பதிவுகளில், தமிழ்நாட்டின் பெருமைகளுள் பலவற்றிற்கு, அமர இலக்கியங்கள் படைத்த பெரும் கவிஞர்களே காரணர்கள் என்பதைப் பாரதி நன்றியோடு இனம் பிரித்துக் காட்டுகிறார்.

## புதிய கலைகள் கொணர்க

ஆங்கிலக் கல்வியின் வருகையால் புதிய புதிய துறைகள் பலப்பல, தம் முன்னே வருவதைக் கண்ட பாரதி, அவை எல்லாம், தமிழிலும் வரவேண்டும் என்று தம்விருப்பத்தை வெளிப்படுத்துகிறார். ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிவுகள் இவை. இன்றும் அவை தமிழ் மண்ணில் மலரவில்லை என்பதே சோகம். புதிய கலைச் செல்வங்களைத் தமிழ் மொழிக்கு உரிய நாளில் கொண்டு வந்து சேர்க்கவில்லை என்றால்,

*மெல்லத் தமிழ் இனிச்சாகும்*

என்று அவர் அஞ்சினார். அந்த எண்ணமே அவருக்கு உவப்பாக இல்லை. நேரடிப் பதிவுக்கு அஞ்சித்தம் கூற்றாகப் பதியாது,

*என்று அந்தப் பேதை உரைத்தான்*



www.saivamonline.com

என்று பதிவு செய்தார். நாம் பாரதிக்கு விழா எடுத்தோம்; படம் எடுத்தோம்; பட்டி மன்றம் அமைத்தோம்; அவர் வேண்டியவாறு எட்டுத்திசையிலும் பயணித்தோம்; ஆனால் வளர்ந்தமைந்த புத்தம் புதிய கலைகளைத் தமிழுக்குத் தமிழ் மொழியில் கொண்டு வரத்தவறினோம்.

*மெல்லத் தமிழ் இனிச் சாகும்*

பாரதி அச்சம் உண்மையாகி விட்டது. பொறியியலை, மருத்துவத்தை, நுண்கலைகள் பலவற்றை இன்று தமிழ் நாட்டில் கல்விக் கூடங்களில் தமிழில் கற்பிக்கும் ஆற்றல் அற்றவர்களாகப் போய்விட்டோம். காலம் கடந்து விட்டது. இனி முயன்று பயனில்லை என முயன்றோர் பலரும் இங்கே கை சலித்துவிட்டனர். மெத்த வளரும் மேன்மைக் கலைகள், தமிழகத்தில் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் அவை தாய்த் தமிழில் இல்லை. தமிழ் மொழியில் கற்பிக்கப்படுவதில்லை என்பது தான் அவலம். ஆங்கிலவழிக் கல்வி மோகம் இன்னும் சில பத்தாண்டுகளில், தமிழை, சமஸ்கிரும் பெற்ற இடத்தில் கொண்டு போய் ஓரங்கட்டி உட்கார வைத்துவிடும். இன்றைய நிலை நீடித்தால், தமிழ் பாடமொழி இடத்தை இழந்து , அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் பேச்சு மொழியாக மட்டும் நிலவும். அடுத்த இருபத்து ஐந்து ஆண்டுகளில் பாரதி குறித்த மெல்லத் தமிழ் இனிச்சாகும் என்ற நிலை வந்தே தீரும்.

---

***ஆங்கிலவழிக் கல்வி மோகம் இன்னும் சில பத்தாண்டுகளில், தமிழை, சமஸ்கிரும் பெற்ற இடத்தில் கொண்டு போய் ஓரங்கட்டி உட்கார வைத்துவிடும். இன்றைய நிலை நீடித்தால், தமிழ் பாடமொழி இடத்தை இழந்து , அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் பேச்சு மொழியாக மட்டும் நிலவும்.***

---

## விதியை வெற்றி கொண்ட மூவர்

தமிழ்மொழி குறித்த உயர்ந்த எண்ணம் கொண்டிருந்தார் பாரதி.

*யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம்.*

எழுதவும், பேசவும், நினைக்கவும், சுவைக்கவும் உரிய உன்னத மொழி தமிழ் என்று அவர் நம்பினார். தாய்மொழியாகிய தமிழை, உலகெங்கும் சென்று பிறமொழியாளர்கள் மத்தியில் விதைத்து மலர்விக்க அவர் விரும்பினார்.



www.saivamonline.com

*தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்*

என்று பாடும் கவிதை வரிகள் நம்மைச் சிந்திக்கவைக்கின்றன. எல்லாக் கவிஞர்களையும் கற்க இயலாவிடிலும், கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகியோர்களின் நூல்களையாவது கற்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். இவர்கள் செய்த மூன்று நூல்கள் வாழும்வரை விதியால் கூட தமிழச்சாதியை அழிக்க முடியாது என்று அவர் கருதியிருந்தார்.

## தமிழ் முழக்கம் செய்வீர்

அறிவு பூர்வமான வாழ்வை விடுத்து, உணர்ச்சிபூர்வமாக வாழ்ந்திருக்கும் தமிழர்களை, அவர் எள்ளி நகையாடத் தவறவில்லை.

*நாமமது தமிழரெனக் கொண்டிங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ?*

வினாத் தொடுத்து அறிவு கொளுத்தும் பாரதி

*தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்*

என்று உரிமையோடு தமிழர்களுக்கு ஆணைபிறப்பிக்கிறார். உலகெலாம் சென்று பரப்பும் முயற்சி ஒருபக்கம் நடக்கட்டும்; இன்னொரு பக்கம், தமிழ் நாட்டுத் தெருக்களில், தமிழை முழங்கச் செய்யுங்கள் என்று வேண்டுகோள் வைக்கிறார்.

***கடந்த எண்பது ஆண்டுகளாக, நாம் பாரதி காட்டிய வழியில், மொழி வளர்ச்சிக்கென்று பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. நமது செயல்கள் கவிஞருக்கு நாம் செய்யும் அவமரியாதை மட்டுமன்று, நமக்கு நாமே செய்து கொள்ளும் பெருங்கேடாக நிற்கின்றன.***

*சேமமுற வேண்டு மெனில் தெருவெல்லாம்*
*தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்.*

ஆனால், கடந்த எண்பது ஆண்டுகளாக, நாம் பாரதி காட்டிய வழியில், மொழி வளர்ச்சிக்கென்று பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. நமது செயல்கள் கவிஞருக்கு நாம் செய்யும் அவமரியாதை மட்டுமன்று, நமக்கு நாமே செய்து கொள்ளும் பெருங்கேடாக நிற்கின்றன.



www.saivamonline.com

## தமிழ் வளர்ச்சிக்கு ஆலோசனைகள்

ஒரு மொழி வளர்ச்சிக்குக் கவிஞன், சில நல்ல ஆலோசனைகளைத்தாம் முன் வைக்க இயலும். சமூகம், அவன் வைத்த சிந்தனைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்புடையது. தமிழ் மொழி வளர்ச்சிக்குக் கவிதையில் பாரதிக்கு முன் எந்த ஒரு தமிழ்க்கவிஞரும் ஆலோசனைகள் வழங்கியதில்லை. பாரதி முதல் முயற்சி மேற்கொள்கிறார்.

1. பிறநாட்டு அறிஞர்களின் உயர்ந்த படைப்புக்கள், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழர்களுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்யவேண்டும்.

2. திருக்குறளுக்கும், சிலப்பதிகாரத்திற்கும், இராம காதைக்கும் இணையான, என்றும் அழியாப் புகழுடைய புதுப்புது நூல்களைத் துறைதோறும் தமிழில் தமிழ் அறிஞர்கள் ஆக்கி அளிக்க வேண்டும்.

3. நாமே நமக்குள் தனித்தனியே, குழுக்களாகக் கூடிக் கொண்டு பழங்கதைகள் காட்டி, பழம்பெருமை பேசி மகிழ்வது மொழி வளர்ச்சிக்கு உதவியாக அமையாது.

4. தமிழ் அறிஞர்களுக்கு இணையான, உலக அறிஞர்கள், இது உன்னதமானது என்று போற்றித் தலை தாழ்த்தும் கம்பீரமான படைப்புக்கள் தமிழிலிருந்து வெளிவருதல் வேண்டும்.

மேற்குறித்த பாரதியின் உணர்வுகளில் பத்து சதம் கூட நாம் இன்று வரை நிறைவேற்றியவர்கள் அல்லர்.

## பாரதி கண்ணீர் உகுப்பார்

மகாகவி பாரதியின் தமிழ் மொழி உணர்வுகள் குறித்த முதன்மைப் பதிவுகளை இங்கே ஈட்டித்தந்துள்ளேன். அரசியல் காரணங்கள், தேசிய மொழிக்கொள்கை, பயிற்று மொழி குறித்த தெளிவற்ற சிந்தனைகள், வேலை வாய்ப்புக் குறித்த பொய்யான பிரச்சாரங்கள், தங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் மொழியைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்ட போலி மனிதர்களின் கீழ்மை எல்லாம் ஒன்று திரண்டு, பாரதி ஓடவிட்ட தமிழ் மொழித்தேரை, முட்டுக் கட்டைகளாக நின்று ஓரிடத்தில் நிற்கவைத்துவிட்டன. இந்த முட்டுக்கட்டைகளை அகற்றும், எந்த ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியும் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பது பாரதிக்குத் தெரிந்தால், அவர் கண்ணீர் உகுப்பார். நாம் என்ன செய்யப் போகிறோம்?



www.saivamonline.com